ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமந்நிகமாந்தமஹாதேஶிகன் அருளிய

திருமந்திரச்சுருக்கு

This document has been prepared by

Sunder Kidāmbi

with the blessings of

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

திருமந்திரச்சுருக்கு

சீரொன்று தூப்புல் திருவேங்கடமுடையான்
பாரொன்ற ச்சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேற ப்போமளவும் வாழ்வு

‡ நாவலர் மறை நால் ஒன்றும் ⋆
நலந் திகழ் மறை ஒன்றோராது ⋆
ஆவலிப்பலைக்கு மோகத்து ⋆
அழுந்தி நின்றலமர்கின்றீர் ⋆⋆
தூ வலம் புரியாம் ஒன்றில் ⋆
துவக்கமாம் வண்ணம் ஒன்றால் ⋆
காவல் என்றகரத்தவ்வாய்க் ⋆
கருத்துறக் காண்மினீரே ॥ **1** ॥

இளக்கம் இல் மயக்கம் தன்னால் ⋆
எனக்கு யான் உரியன் என்னும் ⋆
களக் கருத்தொன்றே கொண்டு ⋆
கடு நரகடைந்து நின்றீர் ⋆⋆
விளக்கும் அவ்வெழுத்தின் நாலாம் ⋆
வேற்றுமை ஏற்றி வாங்கித் ⋆
துளக்கம் இல் அடிமை பூண்டு ⋆
தூயராய் வாழ்மினீரே ॥ **2** ॥

அப்பொருள் இகந்து மற்றும் ⋆
அழித்தழிந்தெழுவார் தாளில் ⋆
இப்பொருள் இகந்தவன் பால் ⋆
இரங்கினிர் வணங்கி வீழ்ந்தீர் ⋆⋆
உப்பொருள் உள்ளி மற்றோர் ⋆
உயிர் தனக்குரிமை மாற்றி ⋆
எப்பொருள் பயனும் ஈதென்று ⋆
எண்ணினிர் எழுமினீரே ॥ **3** ॥

என்றும் ஓர் ஏதம் இன்றி ⋆
இரவியும் ஒளியும் போல ⋆
ஒன்றி நின்றுலகளிக்கும் ⋆
உகம் இகந்தடிமை வைத்தீர் ⋆⋆
ஒன்று மூன்றெழுத்தாய் ஒன்றும் ⋆
ஒன்றில் ஒன்றுடைய முன்னே ⋆
ஒன்றிய இரண்டை உள்ளி ⋆
உளர் என உய்ம்மினீரே ॥ **4** ॥

தத்துவம் அறுநான்கோடு ⋆
தனி இறை அன்றி நின்ற ⋆
சித்தினை உணராதென்றும் ⋆
திரள் தொகை ஆகி நின்றீர் ⋆⋆
மத்தனைத் தனி விடாதே ⋆
மையிலா விளக்கம் ஆக்கி ⋆
உத்தமன் அடிமையான ⋆
உயிர் நிலை உணர்மினீரே ॥ **5** ॥

தனதிவை அனைத்தும் ஆகத்⋆
தான் இறை ஆகும் மாயன்⋆
உனதெனும் உணர்த்தி தாராது⋆
உமக்கு நீர் உரிமை உற்றீர்⋆⋆
எனதிவை அனைத்தும் யானே⋆
இறை எனும் இரண்டும் தீர⋆
மந எனும் இரண்டின் மாறா⋆
வல்வினை மாற்றுவீரே ॥ **6** ॥

அழிவிலா உயிர்கட்கெல்லாம்⋆
அருக்கனாய் அழியா ஈசன்⋆
வழியலா வழி விலக்கும்⋆
மதி எழ மாய மூர்த்தி⋆⋆
வழுவிலாதிவை அனைத்தும்⋆
வயிற்றில் வைத்துமிழ்ந்த மாலை⋆
நழுவிலா நார வாக்கில்⋆
நாடி நீர் நணுகுவீரே ॥ **7** ॥

வயனம் ஒன்றறிந்துரைப்பார்⋆
வன் கழல் வணங்க வெள்கி⋆
நயனம் உள் இன்றி நாளும்⋆
நள் இருள் நண்ணி நின்றீர்⋆⋆
அயனம் இவ்வனைத்துக்கும் தான்⋆
அவை தனக்கயனம் என்னப்⋆
பயனுமாய்ப் பதியுமான⋆
பரமனைப் பணிமினீரே ॥ **8** ॥

‡ உயர்ந்தவர் உணர்ந்தவாற்றால் ⋆
உவந்த குற்றேவல் எல்லாம் ⋆
அயர்ந்து நீர் ஐம் புலன்கட்கு ⋆
அடிமை பூண்டலமர்கின்றீர் ⋆⋆
பயந்திவை அனைத்தும் ஏந்தும் ⋆
பரமனார் நாமம் ஒன்றில் ⋆
வியந்த பேர் அடிமை தோற்றும் ⋆
வேற்றுமை மேவுவீரே ॥ **9** ॥

‡ எண் திசை பரவும் சீரோர் ⋆
எங்களுக்கீந்த எட்டில் ⋆
உண்டவாறுரைப்பார் போல ⋆
ஒன்பது பொருள் உரைத்தோம் ⋆⋆
பண்டு நான் மறையோர் காக்கும் ⋆
மா நிதி இவை அனைத்தும் ⋆
கண்டவர் விள்ளார் விள்ளக் ⋆
கருதுவார் காண்கிலாரே ॥ **10** ॥

அடிவரவு — நாவலர் இளக்கம் அப்பொருள் என்றும் தத்துவம் தனதிவை
அழிவிலா வயனம் உயர்ந்தவர் எண்திசை இன்னமுது

திருமந்திரச்சுருக்கு முற்றிற்று

சீரார் தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம்